# மே 26

## புனித பிலிப் நேரி (1513-1595)



இவர் பிளாரன்ஸ் பட்டணத்தில் பிறந்தார்.இளம் வயதிலிருந்தே பெற்றோருக்கு கீழ்ப்படிந்து நடந்தார். இறைவனுக்கு மாத்திரமே சேவை செய்த இவர் உரோமைக்குச் சென்று ஒரு பிரபுவின் பிள்ளைகளுக்கு கல்வி கற்பித்தார்.கல்வி கற்பிக்கும் பொழுதே இவர் குருத்துவக் கல்வியையும் கற்றார். மக்களை ஏராளமாக மோட்சத்தில் சோக்க விரும்பிய இவர் ஒரு சபையை ஏற்படுத்தினார். திருப்பயணிகளுக்கும், நோயாளிகளுக்கும் சேவை செய்வதே இச்சபையின் முக்கிய நோக்கம்.ஆன்ம குருவுக்குக் கீழ்ப்படிந்து இவர் குருப்பட்டம் பெற்றார்.குருக்களுக்கென்று ஒரு சபையை ஏற்படுத்தினார். தமது புண்ணிய வாழ்வால் நகர மக்கள் அனைவருக்கும் எடுத்துக்காட்டாக விளங்கினார்.நெடுநேரம் பாவசங்கீர்த்தனம் கேட்டு, அனேக பாவிகளை காப்பாற்ற ஆர்வத்துடன் உழைத்தார்.எல்லோரையும் எப்போதும் ஊக்குவிப்பார்.ஒரு பெரிய மனிதர் இவரைப் பார்க்க வந்தார்.அருகில் இளைஞர்கள் கூச்சலிடுவதை பற்றி கேட்டதற்கு என் முதுகின் மேல் விறகு கீறட்டும்.அவர்கள் பாவம் மாத்திரம் செய்யக்கூடாது" என்றார். ஒருமுறை ஒரு வாயாடிப் பெண்ணை சந்தைக்கு அனுப்பி, கோழி வாங்கி வரச் சொன்னார். வரும் வழியில் கோழியின் இறகுகளை பிய்த்து போட்டுக் கொண்டே வரச் சொன்னார். அவள் திரும்பி வந்ததும். "போய் அந்த இறகுகளை பொறுக்கிக் கொண்டு வா" என்றார். அது முடியாத காரியம் என்று அவள் சொன்னாள்."இது போலவே நீ பிறரைக் கெடுத்து பேசும் சொற்களையும் திரும்பப் பெற முடியாது. அவை கொடிய தீமைகளை விளைவிக்கின்றது" என்று கூறினார். திவ்விய நன்மை உட்கொண்டபின் நன்றி செலுத்தாமல் வெளியேறிய மனிதன் பினனாலேயே செல்லும்படி எரியும் திரிகள் ஏந்திய இரண்டு சிறுவர்களை அனுப்பி அவனுக்க நல்ல பாடம் கற்பித்தார். அதன் பின்னர் அவன் நன்மை வாங்கியதும் கோவிலிருந்து நன்றி செலுத்திய பின்னரே வெளியேறுவான்.

கன்னெஞ்சரான பாவி ஒருவனிடம் போய் "இன்று இரவு விளக்குகளை அணைத்துவிட்டு கட்டிலின் நான்கு கால்களிலும் மெழுகுதிரி பற்ற வைத்து 'இன்று இரவு நான் சாவேன். நேரே நகரத்துக்குப் போவேன்.இதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை' என்று மும்முறை சொல்" என்றார். பாவி மனந்திரும்பினான்.

சிந்தனை:"சிறு குற்றங்களையும், கவனத்துடன் விலக்கி நட, சிறு குற்றங்களை பயமின்றி செய்கிறவன் இறுதியில் பெரிய குற்றங்களுக்கு உள்ளாவான்".

செபம்: ஆண்டவரே, அற்பப்பாவத்தையும் நாங்கள் விலக்கி நடக்க உதவி தாரும்.